**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.**10 |
| Name | : | **ராஜ்குமார்** |
| Father's / Husband Name | : | **கருப்புசாமி** |
| Address | : | **சத்திரமனை, பெரம்பலூர்** |
| Age | : | 49/2025 |

**தேதி : 24.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நான் கடந்த 09.06.2020ம் தேதி அன்று என்னுடைய வயலில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது எனது பக்கத்து தோட்டத்தில் சிறுவர்கள் ஆடு மேய்ப்பதாக சொல்லி பெரம்பலூர் போலீஸார் மற்றும் சத்திரமனை கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் அந்த இடத்தில் வந்து விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள். அந்த இடமானது ஒரு பாய்க்கு சொந்தமானது. போலீஸார் அந்த இடத்தை பார்த்து வரைபடம் வரைந்துகொண்டார்கள். வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னுடன் வினோத் என்ற பையன் கையொப்பம் போட்டார். **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விேனாத் என்பவருக்கு எந்த ஒரு நிலமும் அருகில் இல்லை. நான் கையொப்பம் போடும்போது பொதுமக்கள்அங்கு இருந்தார்களா என்றால் கொஞ்சம் தள்ளி ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். வரைபடம் சரியாக இருந்ததா என்றால் சரியாக இருந்தது. சிறுவர்கள் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இடத்திற்கு மேற்கு புறம் என்னுடைய இடம் உள்ளதா என்றால் உள்ளது. போலீஸார் வந்தபோது என்னுடைய வயலில் வரப்பு செதுக்கிகொண்டிருந்தேன். வினோத் என்ன செய்துக்கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.